3 ஜூலை 2021 அறிவிப்பு

இந்திய கிறிஸ்தவ தினம் / ஈஷ் பக்தி திவஸ்

இயேசுகிறிஸ்துவையும் கி.பி 52-ல் இயேசுவின் சீடர்களில் ஒருவரான அப்போஸ்தலன் புனித தோமாவால் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்ட அவரது நற்செய்தியையும், இந்தியகிறிஸ்தவர்களனைவரும் நினைவுகூரும் வண்ணமாக ஆண்டு தோறும் ஜூலை 3-ம் நாள் இந்திய கிறிஸ்தவ தினமாக உலகெங்கிலும் உள்ள அனைத்து இந்திய கிறிஸ்தவர்களாலும் அறிவிக்கப்படுகிறது.

கி.பி 72-ம் ஆண்டு சென்னைக்கருகே புனித தோமா கொல்லப்பட்ட இந்த ஜூலை 3-ம் தேதி 'புனித தோமையர் தினமாக' அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆகையால் இந்திய கிறிஸ்தவர்களாகிய நாம், நம்மது இந்திய கலாச்சாரமும் பாரம்பரியமும் பாதுகாக்கும் வகையில், சாதி, இன, மத, மொழி பேதமின்றி அனைவரையும் ஒன்றிணைத்து ஆண்டுதோறும் ஜூலை 3-ம் நாளை இந்திய கிறிஸ்தவ தினமாக அனுசரிப்போம்.

இந்திய கிறிஸ்தவ தினமாக கொண்டாடப்படும் ஜூலை 3-ம் நாள் இயேசுகிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் இரண்டாயிரம் ஆண்டு (2000) நிறைவை கௌரவிக்கும் பத்தாண்டு (2021-2030) கொண்டாட்டமாக அனுசரிக்கப்படும். இயேசுகிறிஸ்துவின் போதனைகளும், வாழ்வின் கோட்பாடுகளும் இந்திய தேசத்தையும், அகில உலகையும் இன்றும் சமாதானமும், அன்பும் பிரதானமாகக்கொண்டு மறுரூபமாக்கிட பெரிதும் உதவியுள்ளது.